# பனகல் அரசர் – காமராஜர் – அண்ணா – கலைஞர் வழியில் ஜனநாயகத்தை காத்தவர்!

# சட்டமன்றம் உயர்ந்தது – மாண்பு பெரியது என்று உச்சநீதிமன்றம் வரை சென்று நிலை நாட்டினார் நமது முதல்வர்!

## சட்டப்பேரவையில் மாநில சட்டமன்றம் – ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் நெகிழ்ச்சிமிகு உரை!

**சென்னை, ஏப்.28-**

**சட்டமன்றப் பேரவையில் மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமிழ்நாட்டில் பனகல் அரசர், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதலமைச்சர்களாக இருந்த போது பல்வேறு சட்டமசோதாக்களை தாக்கல் செய்து வரலாற்றில் இடம் பிடித்தனர். அந்த வகையில் நமது முதல்வர் தளபதி அவர்களும் வரலாற்று சிறப்புமிக்க சட்டமுன் வடிவுகளை நிறைவேற்றியதுடன் சட்டமன்றம் உயர்ந்தது. அதன் மாண்பு பெரியது என்று உச்ச நீதிமன்றம் வரை சென்று நிலைநாட்டி இந்திய வரலாற்றில் இடம் பிடித்துவிட்டார் என்று நெகிழ்ச்சியுடன் உரையாற்றினார்.**

சட்டப்பேரவையில் மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கையில் அவை முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் நெகிழ்ச்சிமிகு பதிலுரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய 2 மானியக் கோரிக்கைகளுக்கு நான் பதிலுரையாற்ற கடமைப்பட்டிருக்கிறேன். மாநில சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக ஒரு காலத்தில் சென்னை ராஜதானி இருந்தபோதும் சரி, அதற்கு பின் சென்னை மாகாணமாக இருந்தபோதும் சரி, இன்றைக்கு சென்னை தலைநகராகக் கொண்டு தமிழ்நாடு மாநிலமாக இருக்கின்றபோதும் சரி, ஒவ்வொரு முறையும் ஒரு வரலாற்றைப் படைத்துக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு வரலாற்று புருஷர்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். பனகல் அரசரின் அமைச்சரவையிலிருந்த Justice party இருந்த காலத்தில்தான் Communal G.O.-வைக் கொண்டுவரப்பட்டு, வரலாற்றுப் புகழ்பெற்ற அந்த சாசனம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இன்று வரை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அதற்கு பிறகு காங்கிரஸ் தலைமையில் அமைந்த ஆட்சியும் பல்வேறு திட்டங்களை கல்விக்காக, காமராஜர் அவர்கள் கொண்டு வந்து, இந்த சமுதாயத்தில் 100-க்கு 98 பேர் படிக்காதவர்களாக இருந்தவர்களை, 100-க்கு 98 பேர் படிக்க வைத்த ஒரு வரலாற்றையும், இந்த அவையில் அவர் செய்துவிட்டு சென்றிருக்கிறார். அதற்குப் பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த மன்றத்தில், வரலாற்று சிறப்பு மிக்க இந்த மண்ணிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது. இந்திக்கு இங்கு இடமில்லை என்று கூறியது. சுயமரியாதை திருமணங்கள் இங்கு சட்டமாகும் என்று அறிவித்தது. இந்த மூன்றையும் அறிவித்து, அந்தச் சட்டமன்றம் அன்றைக்குப் புகழ்பெற்றது.

### “தமிழ்நாடு” என்று அண்ணா முழங்கினார்!

அந்த மூன்றையும் அறிஞர் அண்ணா அவர்கள் படித்தபோது, நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. ஆனால், மேலே உட்கார்ந்து பார்த்தேன். சட்டங்களை அறிவித்துவிட்டு, அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு உணர்ச்சி மிகுதியிலே சொன்னார். “நான் தமிழ்நாடு என்று சொல்வேன், வாழ்க என்று சொல்ல வேண்டும். அவையிலே மூன்று முறை நான் சொல்வேன், நீங்கள் வாழ்க என்று சொல்ல வேண்டும்” என்று சொல்லி இதை நிலைநாட்டினார். பிறகு, அண்ணா அவர்கள் சொன்னார், “இனி எந்த கொம்பனாலும், யார் வந்தாலும் இதை அழித்து எழுத முடியாது” என்று தெரிவித்துவிட்டு, ஒரு சாசனத்தைப் படைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

### கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு சொத்துரிமை சட்டம்!

அவருக்கு பின்னாலே வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வரலாற்றுப் புகழ்மிக்க ‘பெண்களுக்கு சொத்துரிமையை’ கொடுத்தார்கள். அதேநேரத்திலே Backward Classes-க்கு அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் செய்தது மட்டுமல்லாமல், Constitution சம்பந்தப்பட்ட ஒரு மாநில சுயாட்சி தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதற்கென ஒரு குழுவை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி, அதற்குபிறகு தான் மற்ற சட்டமன்றங்களெல்லாம் கண்விழித்துக் கொண்டன.

ஆகவே, மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும் என்கிற ஒரு உணர்வை, ஆற்றலை ஊட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்லாமல், தலைவருடைய சாதனைகள், வாழ்க்கையிலே எத்தனையோ சாதனைகள் சொல்லிக்கொண்டே போகலாம். அவ்வளவு செய்து புகழ் பெற்று, பெண்களுக்கு பஞ்சாயத்துக்களில் 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஒதுக்கிக் காட்டியவர். இப்படி பல

**ஆளுநர் ஆர்.என்.ரவி எல்லோரிடத்திலும் செல்லுபடியானார்! தளபதியிடம் செல்லுபடியாகவில்லை!**

திட்டங்களை உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதற்கு பிறகு வந்திருக்கிற நம்முடைய தலைவர் தளபதியார் அவர்கள், வந்து நான்கு ஆண்டுகாலத்திற்குள்ளாக ஒரு பெரிய அரசியல் விவாதத்தை உருவாக்கி, அதை நிலைநாட்டியிருக்கிறார். அண்ணல் அம்பேத்கர் அவர்கள், அன்றைக்கு அரசியல் சட்டத்தை Legislature, judiciary, executive என்று மூன்று பிரிவாக வைத்தார்கள்.

இந்த மூன்றுதான் சமுதாயத்தில் இருக்கும் அரசியல் சட்ட power. ஒன்றுக்கொன்று, இது உயர்ந்ததா? அது உயர்ந்ததா? என்று சொல்லமுடியாது. ஆனால், ஒன்றுக்கொன்று காந்த சக்தி இருப்பதைப்போல் இருக்கும். இருந்தாலும், மாநில சட்டமன்றம் தனித்தன்மை வாய்ந்தது.

இந்த மன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றினால், அந்த சட்டம். அந்த சட்டத்தை சரியில்லை—கையெழுத்து போடுகிறவர் கவர்னர். அந்த கவர்னர் என்ன செய்கிறார். அந்த கையெழுத்து போட மாட்டேன் என்று அனுப்புகிறார். ஆனால், மறுபடியும் அதே சட்டத்தை நிறைவேற்றினால், கவர்னர் சொன்ன அறிவுரை ஏற்றும், ஏற்காமலும், அது நம்முடைய இஷ்டம். நிறைவேற்றினால் அதற்கு கண்டிப்பாக கவர்னர் கையெழுத்து போட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அப்படி ஒரு முரண்பாடு வங்கத்தில் இருந்தது; அப்படி ஒரு முரண்பாடு கேரளாவில் இருந்தது; அப்படி ஒரு முரண்பாடு பல இடங்களிலே இருந்தது; ஏன் பஞ்சாப்பிலே கூட இருந்தது. அந்த முரண்பாடு இங்கே நமக்கும் வந்தது. இங்கே ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், வந்தார்கள். ஆனால், எல்லோரிடத்திலும் கவர்னர் செல்லுபடி ஆனார்கள். ஆனால், தளபதியிடத்திலே செல்லுபடி ஆகவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன செய்வீர்களோ, செய்யுங்கள். ஆனால், இந்த சட்டமன்றம் உயர்ந்தது. நான் இருப்பேன், நாளைக்கு வேறொருவர் வருவார், மற்றொரு நாள் இன்னொருவர் வரலாம். ஆனால், இந்த மன்றத்தினுடைய



மாண்பு பெரியது. எங்கள் அதிகாரம் பெரியது. இந்த சட்டமன்றத்தினை கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. இங்கே என்ன பேசினாலும் நம்மீது வழக்கு தொடர முடியாது. ஆனால், ரோட்டிலே பேசினால் வழக்கு தொடர முடியும். அது தான் சட்டமன்றம். அதற்குபிறகு, அந்த கவர்னர் முடியவே முடியாது என்று சொன்னார். முதன்முதலாக, இந்திய அரசியல் சட்டத்தில் கவர்னர், சட்டமன்றம் நிறைவேற்றிய அந்த தீர்மானத்தை கையெழுத்து போடலாமா, இல்லை வேண்டாமா என்று உச்சநீதிமன்றத்தினை நாடிய முதல் முதலமைச்சர் இந்தியாவிலேயே தளபதி ஒருவர் தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிறகு Constitution-ல் கொண்டு வந்து, இனி கவர்னர், கோப்புகள் வந்தால் தேக்கி வைக்கக்கூடாது, அதை அனுப்ப வேண்டும். ஒரு கால், அதில் சில corrections கொடுக்கும்நேர்வில், அதை மறுபடியும் நிறைவேற்றி அனுப்பினால் கையெழுத்துப் போட வேண்டும்; அதில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்துப் போட வேண்டுமென்று தலையிலே கொட்டி எல்லா கவர்னர்களுக்கும் உச்ச நீதிமன்றம் அறிவித்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனாலும், இன்றைக்கு இது எங்கே போய் நின்றது என்று கேட்டால், இராஜ்ய சபாவினுடைய தலைவர், அவர் ஒரு பெரிய வக்கீல், அவர் எங்கே போய் கேட்டார் என்றால், நாம் அல்ல, Supreme Court-ல் கேட்டார். தளபதியினுடைய வரலாற்றை சொல்ல வேண்டிய நேரம் இது சார். தற்போது நேரம் இல்லாததால், விறு, விறுவென்று சொல்லிக்கொண்டு போகிறேன். அதாவது Governor-க்கும் நமக்கும் மட்டுமல்ல; நாம், அவர்வழிதான் Supreme Court-ல் கேட்டோம். ‘whether he has got power or not’ என்று. ஆனால் Supreme Court என்ன சொல்லியது என்றால், ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, அவர் Parliament சொன்னால் கையெழுத்து போட்டாக வேண்டும் என்று. உடனே அது பொங்கிக்கொண்டு வந்தது, யாருக்கு? இராஜ்ய சபா தலைவருக்கு. உடனே அவர் சொன்னார்; அதெப்படி Parliament உயர்ந்தது; பேசக் கூடாது. Ivor Jennings இந்த Constitution பற்றி எழுதியிருக்கிறார்; என்னுடையது உயர்ந்தது என்று சொல்லக்கூடாது. அவரவருடையது உயர்ந்தது.

ஆனால், Parliamentதான் உயர்ந்தது ஜனாதிபதியை விட என்று சொல்வது அரசமைப்புச் சட்டத்திலே மிகப்பெரிய ஒரு controversy-ஐ அரசியல் விற்பன்னர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையினால், இந்தியாவில் ஒரு பெரிய Constitutional crisis உருவாக்கிக் காட்டியவர் நம்முடைய தளபதி அவர்கள்தான்.

இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு எத்தனையோ amendments அதில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், முதன்முதல் amendment, செண்பகம் துரைராஜன் என்பவர், அவருக்கு MBBS பயில backward class மாணவருக்கு இடம் கொடுத்ததால், எனக்கு கிடைக்கவில்லை என்று அவர் High Court-க்குச் சென்றார். High Court-ல் எல்லோரும் சேர்ந்துகொண்டு, அவ்வாறு கொடுத்தது தவறு; இவருக்குக் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். உடனே Supreme Court-க்கு போனார்கள் அத்தனைபேரும்; Supreme Court-லும் அந்த தீர்மானத்தை வாங்கி விட்டார்கள். அதற்கு பிறகுதான் பண்டித நேரு அவர்களிடம் கேட்டு, Constitution-ல் முதல் அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தது இந்தத் தமிழ்நாடு தான்; அது நிறைவேற்றப்பட்டது.

### மாற்றுத் திறனாளிகளுக்கான முதல்வர்!

ஆகவே, இவ்வாறு இந்தியாவில் நம்முடைய தளபதி முதலமைச்சர் அவர்கள் உட்கார்ந்த இடத்திலிருந்தே இந்தியப் பெருமையை நிலைநாட்டியிருக்கிறார். இன்று எல்லோரும் என்ன செய்கிறார்கள்? இந்தி வேண்டாம் என்று சில மாநிலங்களில் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். மகாராஷ்டிராவில் தீர்மானம் கொண்டுவந்தார்கள். ஆகையினால், இவர் ஒரு வழிகாட்டியாக இருக்கிறார். இது சட்டத்துறை. அதேமாதிரி ஒரு சிறு, சிறு உதாரணங்களைக்கூட,—எனக்கு மிகவும் மகிழ்ச்சியானது என்னவென்றால், மாற்றுத் திறனாளிகளை ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உட்காரச் செய்வதற்கான சட்ட மசோதாவை கொண்டு வந்திருக்கிறார். எவ்வளவு பெரிய சமாச்சரம் இவையெல்லாம். இதையெல்லாம் சட்டமன்றம் நிறைவேற்றவில்லை. சட்டமன்றத்தை நடத்துகிற முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

### கண்ணியம் தவறாமல் நடத்தி இருக்கிறோம்!

ஆகையினால், இந்த மன்றத்தில் இந்த 4 ஆண்டுகாலத்தில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இருக்கிறோம். எதிர்க்கட்சிகளுக்கு கருத்து வேறுபாடுகள் வரும். அதற்கு ஆளுங்கட்சிக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை வரும். ஆனால், ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். யாரையும் தனிப்

**ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி என்று எல்லோரையும் கண்ணியம் தவறாமல் நடத்தியிருக்கிறோம்!**

பட்ட வகையில் புண்படுத்த வேண்டுமென்று நாங்களோ, எங்கள் கட்சியோ, எங்கள் தலைவரோ நினைத்தது இல்லை. யாராக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கருதுகிறவர் அவர். உங்களுக்கும் கொள்கை உண்டு. எங்களுக்கும் கொள்கை உண்டு. ஆனால், கண்ணியம் தவறாமல் எல்லோரையும் நடந்திருக்கிறோம். கொஞ்ச காலத்திற்கு இருக்கிறோம். ஆகையினால், சில நேரங்களில் அரசியல் வேகத்தில் நாம் உணர்ச்சிவயப்பட்டு சில வார்த்தைகளை கொட்டியிருக்கலாம். அதையெல்லாம் யாரும் மனதிலே வைக்காமல், 4 ஆண்டுக் காலம் நண்பர்களைப்போல் நாம் பழகியிருக்கிறோம். எனவே, இச்சட்டமன்றம்மூலம் மகத்தான காரியத்தை நடத்தியிருக்கிறார். இது 4 ஆண்டு காலத்தில் நம்முடைய தளபதி முதலமைச்சர் அவர்கள் நடத்தியிருப்பது. எனக்கு ரொம்ப பெருமை! ரொம்ப பெருமை!!

நான் பார்த்து வளர்ந்த பிள்ளை என்பதால், இந்த மன்றத்திலேயே அவருக்கு ஒரு முத்தம் கொடுக்க வேண்டுமென்று ஆசை. காரணம், உட்கார்ந்த இடத்திலேயே, நான்காண்டுக் காலத்திற்குள்ளாக, அகில இந்தியாவே பெருமைப்படும் வகையில் மற்றொரு constitutional amendment வரவிருக்கிறது. அந்த நிலையைக் கொண்டுவந்தவர் என்று நாளை வரலாற்றில் எழுதுவார்கள். இதைக் கொண்டுவந்தவர் யார் என்று கேட்டால், தளபதி மு.க.ஸ்டாலின் என்று வரலாற்றில் எழுதுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகையினால், அவருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றே ஒன்றுதான், நீட் தேர்வை உள்ளே நுழையாமல் நிறுத்த நீட் விலக்கு சட்ட மசோதாவையும், இந்தித் திணிப்புக்கு எதிராக தனித் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார். ஆகையினால், எங்கள் கட்சியினுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாரம்பரியத்தையும் விடாமல், அதே நேரத்தில் ஜனநாயகத்தையும் மறக்காமல், எதிர்க்கட்சிகளையும் பண்போடு நடத்த வேண்டுமென்ற நிலையையும் விடாமல், தோழமைக் கட்சிகளையும் அரவணைத்து செயல்படும் இந்த விதங்களைப் பார்த்து, எப்படியப்பா கற்றாய் இந்த வித்தைகளை என்று நான் அவரைப் பார்த்து கேட்க விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவருடைய அப்பாவுடன் நான் பழகியிருக்கிறேன். அவருக்கு அந்த வித்தைகள் எல்லாம் தெரியும். ஆனால், இவர் பேசாமல் அமைதியாக இருந்துகொண்டே செய்கிறார். அவருடைய தந்தை கலைஞர் அவர்களே, ‘யோவ் ஸ்டாலின் ரொம்ப அமுக்கன், தெரியுமா உனக்கு? பேசாமல் இருப்பான்’ என்றும், ‘அழகிரி படபடவென்று பேசுவானய்யா; ஆனால், இவன் சரியான அமுக்கன்’ என்றும் அடிக்கடி சொல்வார். அப்படி அமுக்கனாக இருந்துகொண்டே இவ்வளவு வேலைகளைச் செய்திருக்கிறீர்களே இத்தகைய சூழ்நிலையிலும்? உங்கள் அனைவருக்கும் உட்கார்ந்து பேசத்தான் இந்தச் சட்டமன்றம் கிடைத்திருக்கிறது. ஆனால், நான் ஒருவன்தான் விழுந்து விழுந்து இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றியிருக்கிறேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

சபாநாயகர் அவர்களே, உங்களிடம் பலமுறை பணிந்திருக்கிறேன். இதில் மிகவும் மாட்டிக் கொண்டவர் நீங்கள்தான். கோபம் வரும். அப்படித்தான் சில நேரங்களில் கோபம் வரும். கோபம் வந்தாலும், அது பொய்க் கோபம். உதாரணமாக, உறுப்பினர் தளவாய் சுந்தரம் அவர்கள் கையை உயர்த்தினாலும், வாய்ப்புக் கொடுக்கவே மாட்டார். ஆனால், பக்கத்தில் வந்து நின்றுவிட்டால், பக்கத்துவீட்டு சொந்தக்காரன் போன்று பேசிக்கொண்டிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

### திறமையாக செயல்படக் கூடியவர் பேரவைத் தலைவர்!

தற்போதுகூட சாயுங்காலம் எதிர்க்கட்சிக் கொறடா வேலுமணி அவர்கள் பேசினார்கள். அங்கு சென்றவுடனேயே சமாதானம் செய்துவிடுவார். அவர் அருகில் சென்று நின்றுவிட்டால் சமாதானமாகிவிடுவார்கள். அந்தளவிற்கு அவர் செயல்படுகிறார். கடந்த 4 ஆண்டுக் காலமாக இந்த மன்றத்தை எல்லோரும் மனமகிழத்தக்க வகையில் நடத்திச் சென்றிருக்கிறீர்கள். உங்களுக்கும் இந்த மன்றத்தின் சார்பில் மகத்தான நன்றியை, பாராட்டை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சட்டமன்றத்தில் பேசுவது நாமாக இருந்தாலும், இதை நடத்துபவர் முதன்மைச் செயலாளர் சீனிவாசன் அவர்கள்தான். அவர் நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் இருந்தவர். அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இவ்வளவிற்கும் மேலாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், போகாமல் கடைசி வரையிலும் உட்கார்ந்திருக்கிற மரியாதைக்குரிய அம்மையார், அதைத்தான் சொல்ல வருகிறேன். பொறுமை வேண்டும். என்ன கருத்து சொல்கிறார்கள் என்பதைக் காதில் கேட்டுக்கொள்ள வேண்டும். உட்கார்ந்தபிறகு பதில் சொல்ல வேண்டும். அவருக்கும்,—இவர் இல்லாவிட்டாலும், தற்போது திரு. அண்ணாமலை போல் ஆகிவிட்டார் இவர்.

**பேரவைத் தலைவர்:** அவர், உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**அமைச்சர் துரைமுருகன்:** ஆம். நயினார் நாகேந்திரன் அவர்கள். மிகவும் நல்ல நண்பர். எனினும், அவர் போய்விட்டார். எனவே, திருமதி வானதி சீனிவாசன் அம்மையார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லோரிடத்திலும் அழகாகப் பழகியிருக்கிறோம். அனைவருக்கும் நன்றி. எங்களுடைய அமைச்சரவையில் அனைவரும் ஒற்றுமையாக இருந்து பணியாற்றியிருக்கிறோம். தலைவரிடத்தில் என்ன மரியாதை உண்டோ, அதே மரியாதையை இவருக்கும் கொடுத்திருக்கிறோம். ஆக மன்றத்திலிருக்கிற அத்தனை பேருக்கும்,

### காவலர்களுக்கு நன்றி!

அதைவிட காலை முதல் மாலை வரை நின்று கொண்டிருக்கிற watch and ward காவலர்களுக்கும் நன்றி. ஏனெனில், நாம் உட்கார்ந்திருக்கிறோம்; அவர்கள்தான் நின்றுகொண்டேயிருக்கிறார்கள். அவர்களுக்கும் எங்களுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர்கள். எங்களை செய்திகளை எல்லாம் நல்ல முறையில் வெளியிட்டிருக்கிறீர்கள். சில நேரங்களில் குத்தலாகவும் வெளியிட்டிருக்கிறீர்கள். சில நேரம் புகழ்கிறீர்கள். எப்படியிருந்தாலும் பத்திரிகை பத்திரிகைதான். நீங்கள்தான் இந்த நாட்டில் நன்மைக்கும்தீமைக்கும்பொறுப்பாளிகளாகக் காட்டுகிறவர்கள். உங்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை இவையெல்லாம் என்னுடைய பொறுப்பில் வருகிறது. உறுப்பினர்கள் நல்ல வெட்டுத்தீர்மானங்களையெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். அவற்றிற்கெல்லாம் இரண்டு நாட்களாக உட்கார்ந்து notes எடுத்து எழுதி வைத்திருக்கிறேன். அதை அவ்வப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கூறி சாத்தியக்கூறுகள் உள்ளவற்றையெல்லாம் செய்து கொடுக்கிறேன் என்றுகூறி, வெட்டுத் தீர்மானங்களை, உறுப்பினர்கள் அருள்கூர்ந்து திரும்பப் பெற்றுக் கொண்டு மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலுரை வழங்கினார்.